# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~ U/S 173 BNSS

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154-இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213035

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 9/AC/2024 Date: நாள் 09/11/2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7(a) 9

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச் Sections பிரிவுகள்: 7(a) r/w 12

   (iii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 08/11/2024

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 15.00 மணிக்கு முன்பு

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09/11/2024 Time : நேரம் 10.00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 11.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தன்னிச்சையாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ தென் கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பாபு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. சண்முகம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.04.1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திருமதி. A. மோனிகா, சார்பதிவாளர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம். மற்றும் 5 நபர்கள்.
   விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09/11/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

09/11/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09.11.2024 at 12.30 hrs

Name: பெயர் S. ராஜு
Rank: நிலை ......................No. எண் ..........

காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
திருவண்ணாமலை.

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2024 U/s 7 (a) and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்கள். 8 மற்றும் 12-ன் தொடர்ச்சி...**

| | |
|---|---|
| **குற்றம் சாட்டப்பட்ட நபர்கள்:**<br><br>1. திருமதி.A.மோனிகா (36),<br>சார் பதிவாளர்,<br>சார் பதிவாளர் அலுவலகம்,<br>ஊத்தங்கரை,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br><br>2. திரு.C.M.மதியழகன் (31),<br>த/பெ முத்து,<br>க.எண்.1222, அம்பேத்கார் நகர்,<br>சாத்தனூர் கிராமம்,<br>தணட்ராம்பட்டு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம்.<br><br>3. திரு.M.ஜிலானி பாஷா (33),<br>த/பெ மைதீன் உசேன்,<br>க.எண். 93/118,<br>நாராயண் நகர்,<br>ஊத்தங்கரை,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br><br>4. திரு.K.மேகவண்ணன் (34),<br>த/பெ கார்மேகம்,<br>க.எண். 105,<br>நொச்சிப்பட்டி கிராமம் (ம) அஞ்சல்,<br>ஊத்தங்கரை வட்டம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br><br>5. திரு.M.தினேஷ்குமார் (30),<br>த/பெ மாரியப்பன்,<br>க.எண். 232,<br>வேலாவள்ளி கிராமம்,<br>வாலிப்பட்டி அஞ்சல்,<br>போச்சம்பள்ளி வட்டம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br><br>6. திருமதி.S.பரிமளா (44),<br>க/பெ செல்வம்,<br>பத்திர எழுத்தர்,<br>காரப்பட்டு கிராமம் (ம) அஞ்சல்,<br>ஊத்தங்கரை வட்டம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | 08.11.2024 ஆம் தேதி காவல் ஆய்வாளர் திரு.R.D.ரவிகுமார் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வரும் திருமதி.A.மோனிகா அவர்கள் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் வைத்து ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெறுவதாகவும், அந்த பணத்தை அவர் அலுவலகம் முடித்து வீட்டிற்கு செல்லும் போது அவருடைய சொந்த வாகனமான TN 83 MA 9832 என்ற மாருதி சுசுகி டிசையர் காரில் எடுத்துசெல்வதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.பிரபு சென்னை உயர்நீதிமன்ற அலுவலாக சென்றுள்ள காரணத்தால் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் (மு.கூ.பொ) ஊ.த.க பிரிவு கிருஷ்ணகிரி அவர்கள் |

காவல் ஆய்வாளர் திரு.R.D.ரவிகுமார் அவர்களிடம் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்யுமாறு கொடுத்த வாய்மொழி உத்தரவின் பேரில், 08.11.2024-ஆம் தேதி மாலை 17.10 மணிக்கு ஊத்தங்கரை ஸ்பின்னிங் மில் ரோட்டில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு சாட்சிகள், காவலர் குழுவினர் மற்றும் கிருஷ்ணகிரி ஆயுதப்படை பெண் காவலர் 2101 திருமதி.G.சத்யா ஆகியோருடன் சென்று மேற்படி அலுவலகத்தின் உள்ளே நுழைந்தபோது அந்த அறையில் பொதுமக்கள் அமருவதற்காக இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தது. அதில் சில நபர்கள் அமர்ந்திருந்தார்கள். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அந்த அலுவலகத்தின் மத்திய அறைக்கு சென்று அந்த அலுவலகத்தின் கணினி அறையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் A.ஹரிஹரன் என்பவரிடம் காவல் ஆய்வாளர் தன்னையும், தன்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவல் குழுவினரையும் அவரவர் தம் அடையாள அட்டைகளை காண்பித்து அறிமுகம் செய்து கொண்டார். பின்பு காவல் ஆய்வாளர் ஊத்தங்கரை சார் பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை தெரிவித்து, சோதனைக்கு வந்திருந்த அனைவரும் தங்களை சுய பரிசோதனை செய்து காண்பித்துக்கொண்டனர். மேலும், அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டார். பின்னர் அங்கு பணியிலிருந்த இதர பணியாளர்களை அவரவர் இருக்கையிலேயே அமர்ந்து பணிகளை கவனிக்குமாறு அறிவுறுத்தினார். பின்பு காவல் ஆய்வாளர் இளநிலை உதவியாளார் திரு.ஹரிஹரனிடம் சார்பதிவாளர் எங்கே என கேட்க, அதற்கு அவர் சார்பதிவாளர் திருமதி.மோனிகா அவர்கள் உடல்நிலை சரியில்லாததால் அவருடைய சொந்த காரில் கிருஷ்ணகிரி To ஊத்தங்கரை சாலையில் உள்ள அனிருத் மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். அச்சமயம் சுமார் 17.40 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் சென்னை உயர்நீதிமன்ற அலுவல் முடித்து வந்து உத்தரவுப்படி மேற்படி திடீர் தணிக்கையில் கலந்துகொண்டேன். பின்னர் காவல் ஆய்வாளர் திரு.R.D.ரவிகுமார் அவர்கள் ஊத்தங்கரை சார்பதிவாளர் திருமதி.மோனிகா அவர்களது காரில் ஏதேனும் லஞ்சப்பணம் வைத்திருக்க கூடும் என்று கருதி மேற்படி அலுவலக திடீர் தனிக்கை செயல்முறை நடவடிக்கைகளை கவனித்துக்கொள்ளுமாறு என்னிடம் அறிவுறுத்திவிட்டு சார்பதிவாளர் திருமதி.மோனிகா அவர்களது காரினை சோதனை

செய்ய சென்றுவிட்டார். பின்பு நான் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் திடீர் தணிக்கையினை தொடர்ந்து மேற்கொண்டேன். பின்பு, மேற்படி அலுவலகத்தில் இருந்த தனிநபர்களை அழைத்து விசாரணை செய்தேன். அதில் திரு.C.M.மதியழகன் என்பவரை விசாரிக்க, அவர் தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த 3 வருடங்களாக சார்பதிவாளர் கூறியதன் பேரில் வேலைசெய்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்தில் 1910 முதல் 1974 ஆம் ஆண்டு வரையில் வில்லங்க சான்று கேட்டு வரும் பொதுமக்களுக்கு கையால் எழுதப்படும் வில்லங்க சான்றினை எழுதி கொடுப்பேன் எனவும் அதற்காக தனக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் சம்பளமாக சார்பதிவாளர் கொடுப்பார்கள் என்று தெரிவித்தார். பின்னர் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி அவரிடமிருந்த 500 ரூபாய் தாள்களை கற்றையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் ரூ.50,000/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவரிடம் இருந்த பணத்திற்கு முதலில் அவர் சரியான விளக்கம் கொடுக்காமலும், முன்னுக்கு பின் முரனாக பதில் கூறிவிட்டு பின்பு அன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்காக ஆவண எழுத்தர்களால் அந்த பணம் சார் பதிவாளருக்கு தருமாறு தன்னிடம் கொடுக்கப்பட்ட பணம் என்று கூறினார். எனவே அந்த பணம் சார்பதிவாளர் திருமதி.மோனிகாவுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்டது என்று சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.50,000/-ஐ அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். பின்னர் அங்கிருந்த திரு.ஜிலானிபாஷா என்பவரை விசாரிக்க, அவர் தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த 2 வருடங்களாக சார்பதிவாளர் கூறியதன் பேரில் வேலைசெய்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்தில் பதியப்படும் ஆவணங்களை கணினியில் ஸ்கேன் செய்து கொடுப்பேன் என்றும், அதற்காக சம்பளமாக தனக்கு ஒரு நாளைக்கு ரூ.1,000/- வீதம் சார்பதிவாளர் கொடுப்பார்கள் என்று தெரிவித்தார். பின்னர் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி அவரிடமிருந்த ரூ.5,000/-ஐ தனியாகவும், ரூ.70/-ஐ தனியாகவும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவரிடம் இருந்த பணத்திற்கு முதலில் சரியான விளக்கம் கொடுக்காமல் முன்னுக்கு பின் முரனாக பதில் கூறிவிட்டு பின்பு அன்றைய தினம் வில்லங்கசான்று மற்றும் சான்றிட்ட

நகல்கள் எடுத்து கொடுத்ததற்காக ஆவண எழுத்தர்களால் அந்த பணம் சார் பதிவாளருக்கு தருமாறு தன்னிடம் கொடுக்கப்பட்ட பணம் என்று கூறினார். எனவே அது சார்பதிவாளர் திருமதி.மோனிகாவுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்டது என்று சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.5,000/-ஐ அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். மேலும் அவர் வசமிருந்த பணம் ரூ.70/- அவருடைய கை செலவிற்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்பதால் அந்த பணம் அரசு சாட்சிகளின் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.மேகவண்ணன் என்பவரை விசாரிக்க, அவர் தான் மேற்படி அலுவலகத்தில் இன்று காலை பதிவுக்காக தயார் செய்து கொடுத்த புதூர் புங்கனையை சேர்ந்த பாரதி அவர்கள் பெயரில் கிரையம் செய்யப்பட்ட ஆவணத்தை பெற்றுச்செல்ல வந்திருப்பதாக தெரிவித்தார். மேலும் மேற்படி ஆவணம் வாங்குவதற்கான ஒப்புகை சீட்டு ஏதும் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார். பின்னர் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி அவரிடமிருந்த ரூ.6,500/-ஐ தனியாகவும், ரூ.960/-ஐ தனியாகவும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவரிடம் இருந்த பணத்திற்கு அவர் சரியான விளக்கம் கொடுக்காததாலும், முன்னுக்கு பின் முரனாக பதில் கூறியதாலும், அந்த பணம் சார் பதிவாளருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததாலும் அந்த பணம் ரூ.6,500/-ஐ அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். மேலும் அவர் தனியாக வைத்திருந்த பணம் ரூ.960/- அவருடைய கை செலவிற்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்பதால் அந்த பணம் அரசு சாட்சிகளின் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.தினேஷ்குமார் என்பவரை பற்றி விசாரிக்க, அவர் தான் பத்திர எழுத்தர் திருமதி.விஜயலட்சுமி அவர்களது மகன் என்றும், தனது அம்மா கூறியதன் பேரில் தங்களது வாடிக்கையாளருக்காக கையால் எழுதப்படும் வில்லங்க சான்று (Manual EC) கேட்டு 10 நாட்களுக்கு முன்பு கொடுத்திருந்த விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து தெரிந்து கொண்டு, தனது அம்மாவால் தயாரித்துக்கொடுக்கப்பட்டு அன்று பதிவு செய்யப்பட்ட 3 ஆவணங்களை பெற்றுச் செல்வதற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர்

அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி அவரிடமிருந்த ரூ.3,500/-ஐ தனியாகவும், ரூ.400/-ஐ தனியாகவும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவரிடம் இருந்த பணத்திற்கு அவர் சரியான விளக்கம் கொடுக்காததாலும், முன்னுக்கு பின் முரனாக பதில் கூறியதாலும் அந்த பணம் சார் பதிவாளருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததாலும் அந்த பணம் ரூ.3,500/-ஐ அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். மேலும் அவர் தனியாக வைத்திருந்த பணம் ரூ.400/- அவருடைய கை செலவிற்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்பதால் அந்த பணம் அரசு சாட்சிகளின் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த திருமதி.பரிமளா என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி அலுவலகத்திற்கு வெளியே எதிரில் பரிமளா, பத்திர எழுத்தர் என்ற பெயரில் கம்ப்யூட்டர் சென்டர் வைத்து பத்திரம் தயாரித்து கொடுக்கும் வேலை செய்து வருவதாகவும், அன்று காலை தான் 5 ஆவணங்களை பதிவிற்காக கொடுத்திருந்ததாகவும், அந்த ஆவணங்களை வாங்கிச்செல்வதற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் திருமதி.பரிமளாவிடம் ஆவணங்கள் தயார் செய்து கொடுக்க எவ்வளவு பணம் கட்டணமாக வாங்குவீர்கள் என்று கேட்க, அதற்கு அவர் ஒரு ஆவணம் தயார் செய்து கொடுக்க சுமார் ரூ.500/- வரையில் கட்டணமாக வாங்குவோம் என்றும் மேலும் தன்னிடம் ஆவணம் தயார் செய்ய வருபவர்களிடம் அந்த ஆவண பதிவிற்கு அரசாங்கத்திற்கு ஆன்லைன் மூலம் செலுத்தும் கட்டண தொகையினை தானே செலுத்துவதாகவும் சொன்னார். மேலும் அவர் சற்று படபடப்புடன் காணப்பட்டதாலும், அவர் கூறிய தகவல்கள் முரன்பட்டதாக இருந்ததாலும் அது குறித்து விசாரித்து அறியும் பொருட்டு திருமதி.பரிமளா மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோருடன் ஊத்தங்கரை சார் பதிவாளர் அலுவலக நுழைவு வாயிலின் நேரெதிரில் சுமார் 80 அடி தொலைவில் தெற்கு பார்த்தவாறு அமைந்திருந்த பரிமளா, பத்திர எழுத்தர் என்று எழுதப்பட்டிருந்த கடைக்கு வரப்பட்டது. பின்னர் அவர்கள் பத்திர பதிவு செய்வதற்காக கிருஷ்ணகிரி மாவட்ட பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்ட லைசன்ஸ் குறித்து கேட்க, லைசன்ஸ் தன்னிடம் இல்லை என்றும், ஊத்தங்கரை வட்டம் பாவக்கல்லை சேர்ந்த தனது மாமாவான பத்திர எழுத்தர் திரு.அருணகிரி என்பவரது பெயரில் தான் ஆவண

எழுத்தர் பணியினை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரிடம் பத்திர பதிவிற்காக ஆவணம் தயார் செய்து கொடுப்பதற்கு வாங்கப்படும் கட்டணத்திற்கான இரசீதுகள் மற்றும் இதர பதிவேடுகள் ஏதேனும் பராமரித்து வருகிறீர்களா என்று கேட்டபோது, அதற்கு அவர் அதுபோல் எதுவும் இரசீதுகளோ, பதிவேடுகளோ பராமரிப்பதில்லை என்று கூறினார். பின்னர் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி அவரது கடையில் கணினி மேசைக்கு கீழ் வைத்திருந்த Leviya A step ahead என்ற பேட்ச் தைக்கப்பட்டிருந்த ஒரு கருப்புநிற கைபையின் மத்திய பகுதியில் இருந்து 500 ரூபாய் தாள்களை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் எவ்வளவு உள்ளது என திருமதி.பரிமளா அவர்களிடம் கேட்க, அவர் இன்று தன்னிடம் ஆவணம் தயார் செய்த 5 நபர்களுக்கு தான் ஆன்லைன் மூலம் பதிவுக் கட்டணம் செலுத்துவதற்காக பெற்று வைத்திருந்த தொகை ரூ.80,000/- அதில் உள்ளது என்று கூறினார். பின்னர் திருமதி.பரிமளா அவர்களிடம் விசாரணை செய்தபோது, அதில் மேற்படி 5 ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணத் தொகை ரூ.69,890/- முன்னதாகவே ஒரு வங்கி கணக்கு மூலம் செலுத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. மேலும் அந்த வங்கி கணக்கு சுற்றுலாவிற்க்காக கோவா சென்றுள்ள அவரது கணவர் திரு.செல்வம் என்பவருடையது என அவர் கூறினார். அதற்கான வங்கி கணக்கு புத்தகம் ஏதேனும் உள்ளதா என்று கேட்க அந்த வங்கி கணக்கிற்க்கான கணக்கு புத்தகம் தன்னிடம் இல்லை என திருமதி.பரிமளா தெரிவித்தார். எனவே அந்த பையிலிருந்த பணத்தை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.1,20,000/- இருந்தது. அதிலிருந்த கூடுதல் தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, பிறகு அது தான் அன்று காலை வீட்டிலிருந்து எடுத்து வந்த தொகை என்றார். திருமதி.பரிமளா கூறிய விளக்கம் முரண்பட்டதாக இருந்ததால், மேற்படி அலுவலகத்தில் இருந்த பணம் ஆவண எழுத்தர் திருமதி.பரிமளா தன்னால் தயார் செய்து கொடுக்கப்பட்ட ஆவணங்களை அன்று பதிவு செய்து கொடுத்ததற்காக ஊத்தங்கரை சார்பதிவாளர் திருமதி.மோனிகா அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக அன்று பத்திர பதிவு செய்த தனது வாடிக்கையாளர்களிடம் பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க நம்பதகுந்த வலுவான காரணங்கள் இருந்ததால் மேற்படி பணம் ரூ.1,20,000/-ஐ மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது அரசு சாட்சிகள்

முன்னிலையில் கைப்பற்றினேன். பின்னர் திருமதி.பரிமளா மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோருடன் மீண்டும் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகம் வந்து மேற்படி அலுவலக மத்திய அறை, கணினி அறை, பதிவறை மற்றும் Store Room ஆகியவற்றில் உள்ள ஆவணங்கள் மற்றும் கோப்புகளில் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் 08.11.2024 அன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் விவரம் குறித்து இளநிலை உதவியாளர் திரு.ஹரிஹரன் அவர்களிடம் விசாரிக்க அவர் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தின் 08.11.2024 நாளது A மற்றும் H கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் 52 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட மொத்த வருவாய் ரூபாய்.10,35,154/- எனவும் தெரிவித்தார். மேலும் விசாரணைக்காக அலுவலக வருகைப் பதிவேடு (தொகுதி எண்.109) நவம்பர் மாத பக்கம், தனியார் நிறுவன ஊழியர்களுக்கான வருகைப் பதிவேட்டின் நவம்பர் மாத பக்கம், தனி நபர் பணப்பதிவேடு 08.11.2024-ஆம் நாளுக்கான பதிவுகள் கொண்ட பக்கம் ஆகியவற்றை நான் மற்றும் அரசு சாட்சிகள் பார்வையிட்டும், அதற்கு அடையாளமாக மேற்கண்ட பக்கங்களில் கையொப்பம் செய்தோம். மேற்படி ஆவணங்கள் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, இளநிலை உதவியாளர் திரு.ஹரிஹரன் அவர்கள் சான்றொப்பமிட்டு வழங்கினார். மேலும், பத்திர எழுத்தர் திருமதி.பரிமளா அவர்கள் இன்று பத்திர பதிவிற்க்காக அலுவலகத்தில் கொடுத்த ஆவணங்களின் விவரங்கள் குறித்து கேட்க, இளநிலை உதவியாளர் திரு.ஹரிஹரன் அவர்கள் இன்று காலை திருமதி.பரிமளா அவர்களால் கொடுக்கப்பட்ட 5 ஆவணங்களின் பத்திரபதிவு முடிந்துவிட்டதாக கூறி அவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அந்த ஆவணங்களை பார்வையிட்டதில் அந்த ஆவணங்கள் 1) 7365/2024, 2) 7385/2024, 3) 7386/2024, 4) 7408/2024 மற்றும் 5) 7414/2024 என பதிவு செய்யப்பட்டு ஆவண எண் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி ஆவணங்கள் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, இளநிலை உதவியாளர் திரு.ஹரிஹரன் அவர்கள் சான்றொப்பமிட்டு வழங்கினார். மேற்கண்ட ஆவண நகல்கள் மேல் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.ஹரிஹரன் அவர்களிடம் இந்த ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் தங்கள் அலவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்க, அதற்கு அவர் அவ்வாறு

இலக்கு ஏதும் இல்லை என்றும், இணையவழியில் மட்டுமே கொடிநாள் வசூல் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் அரசுக் கணக்கில் உள்ள இருப்புத் தொகை பற்றி அவரிடம் கேட்க, தற்போது சார் பதிவாளர் அலுவலகங்களில் எந்த தொகை செலுத்த வேண்டுமானாலும் அதை இணையவழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் பணமாக வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். பின்னர் 1) திரு.A.ஹரிஹரன், 2) திரு.S.தினேஷ்குமார், 3) திரு.M.பழனி, 4) திரு.C.M.மதியழகன், 5) திரு.M.ஜிலானி பாஷா, 6) திருமதி.பரிமளா, 7) திரு.K.மேகவண்ணன் மற்றும் 8) திரு.M.தினேஷ்குமார் ஆகியோரை அரசு சாட்சிகள் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தனர். இதனிடையே சேலம் ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.R.D.ரவிகுமார் அவர்கள் சார் பதிவாளர் திருமதி.மோனிகா அவர்களது காரினை சோதனை செய்தும், அதற்கான செயல்முறை நடவடிக்கையினை தயார் செய்து முடித்தும் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகம் திரும்ப வந்து திடீர் தணிக்கையில் கலந்துகொண்டார். இது தொடர்பாக ஒரு செயல்முறை நடவடிக்கைகள் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலக மடிக்கணினியில் 08.11.2024-ம் தேதி மாலை 17.10 முதல் 09.11.2024 ஆம் தேதி அதிகாலை 03.30 வரை தயார் செய்யப்பட்டது. அதன் நகல்கள் ஆவண எழுத்தர் திருமதி.பரிமளா, தனிநபர்களான திரு.C.M.மதியழகன் மற்றும் திரு.M.ஜிலானிபாஷா ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு பொது ஊழியரான சார் பதிவாளர் திருமதி.A.மோனிகா என்பவர் ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் தனது அலுவலகத்தில் தன்னிச்சையாக தன்னால் அரசு அலுவல்களை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனிநபர்களான திரு.C.M.மதியழகன், திரு.M.ஜிலானிபாஷா ஆகியோர் மூலம் கையூட்டாக பணம் பெற முயற்சி செய்துள்ளார் என நம்புவதற்கு சரியான முகாந்திரம் உள்ளது. மேலும் ஆவண எழுத்தர் திருமதி.S.பரிமளா, திரு.K.மேகவண்ணன் மற்றும் திரு.M.தினேஷ்குமார் ஆகியோர் பத்திரபதிவு செய்வதற்காக சார் பதிவாளருக்கு கையூட்டு கொடுக்கும் உள்நோக்கத்துடன் பணம் வைத்திருந்ததற்கான சரியான முகாந்திரம் உள்ளது. எனவே கையூட்டாக பணம் பெற முயற்சித்த குற்றத்திற்காக ஊத்தங்கரை சார்பதிவாளர் திருமதி.A.மோனிகா என்பவர் மீது இன்று 09.11.2024-ம்

தேதி காலை 11.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018-ன்படியும், மேற்படி சார்பதிவாளருக்கு கையூட்டு பெறுவதில் உடந்தையாக செயல்பட்ட குற்றத்திற்காக ஆவணம் தயாரித்து கொடுக்கும் திருமதி.S.பரிமளா, பத்திர எழுத்தர்களிடம் பணிபுரியும் திரு.K.மேகவண்ணன், திரு.M.தினேஷ்குமார் மற்றும் ஊத்தங்கரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் தனிநபர்களான திரு.C.M.மதியழகன், திரு.M.ஜிலானிபாஷா ஆகியோர் மீது u/s 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 -ன்படியும் குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

09/11/24

**காவல் ஆய்வாளர்**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு.**
**கிருஷ்ணகிரி.**